பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹூ சித்திரை மீ 08 உ. ஞாயிற்றுக்கிழமை [21-04-1991] UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்: 138

# மன்னார் பரப்புக்கடந்தானில் உக்கிர சண்டை!

## 9 படையினர் பலி! 20 பேர் காயம்!!

கொழும்பு, ஏப்ரல் 21

மன்னார்—பரப்புக்கடந்தான் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் உக்கிரச் சண்டை நடைபெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் மட்டும் இப்பகுதியில் இடம்பெற்ற மோதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 9 பேர் உயிரிழந்ததாகவும், மேலும் இருபது சிப்பாய்கள் வரை காயமுற்றதாகவும் கொழும்பில் பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினருக்கு உதவியாக பெரும் எடுப்பில் விமானத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெள்ளியன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கடும் சண்டை இடம்பெற்றது. ஸ்ரீலங்கா விமானப் படையின் இரண்டு அவ்ரோ விமானங்கள், இரண்டு பொம்மர்கள், இரண்டு ஹெலிகள் ஆகியன இப்பகுதியில் விடாது தொடர்ச்சியாக வானத் தாக்குதல்களை நடத்திய வண்ணம் இருந்தன.

முன்னேற முயலும் படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் சளைக்காது தாக்குதல் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ-15]

### முச்சந்தி முரளி



அப்ப...... பரீட்சை சூடு பிடிச்சிட்டுது எண்டு சொல்லுங்கோ......!

## தமிழர் மூவர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஏப். 21

கடந்த செவ்வாயன்று திருகோணமலை மாவட்டம் நாரையந்தன் குளத்தில் மூன்று அப்பாவித் தமிழர்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கதிர்காமத்தம்பி பரராஜஸிங்கம் [வயது 47], பத்தினியன் செல்வக்குமாரி [வயது 22], தில்லைநாதன் பவளகாந்தன் [வயது 20] ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர். [உ]

## லெப். கேணல் கிரேசி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 21

மன்னார் பரப்புக்கடந்தானில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் கேணல் கிரேசி [கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை — வட்டக்கச்சி] வீரமரணமடைந்தார்.

1985 ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட கிரேசி பல தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தலைமை வகித்துள்ளார்.

இந்திய இராணுவத்தினருடனான போரின் பொழுது கிளிநொச்சி மாவட்டத்தின் பொறுப்பாளராக இருந்து போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றார்.

1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மகளிர் படைப் பிரிவை சேர்ந்த சுகி எனும் போராளியை அவர் திருமணம் செய்திருந்தார்.

அவரது புகழுடல் நேற்று நண்பகல் 12 மணியளவில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் மக்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காமினி நாடுதிரும்பினார்

கொழும்பு, ஏப். 21

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா கடந்த வியாழன் இரவு நாடு திரும்பினார்.

அடுத்த நாள் காலை நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஜனாதிபதி பிரேமதாஸா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சியில் அவர் பங்குபற்றினார்.

திரு. காமினி திஸநாயக்கா நாடு திரும்பியதும் அவருக்கு எதிராக "கிரிமினல்" குற்றச் சாட்டுகள் சுமத்தப்படலாம் என்று முன்னர் ஊகம் அடிபட்டது தெரிந்ததே. [ச]

## அரச அதிபராக பொன்னம்பலம் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராக திரு. க. பொன்னம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதுவரை முல்லைத்தீவு அரசாங்க அதிபராகப் பதவி வகித்தவர் ஆவார்.

திரு. பொன்னம்பலம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளது தொடர்பான பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கடிதம் நேற்று முன்தினம் யாழ். செயலகத்துக்குக் கிடைத்தது.

இதேவேளை. திரு. பொன்னம்பலம் இப்போது கொழும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 4 போராளிகள் வீரமரணம்

மன்னார் பரப்புக்கடந்தானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

லெப்டினன்ட் கேணல் கிரேசி [கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை — வட்டக்கச்சி], லெப்டினன்ட் வாசு [துரைராஜா இவ்வியராஜா — நெல்லியடி], இரண்டாவது லெப்டினன்ட் தென்னவன் [வைத்திலிங்கம் விக்னேஸ்வரன் — தொண்டமனாறு], இஷோ ஆகிய நான்கு போராளிகளுமே வீரமரணமடைந்தனர். [உ]

## ஜி.சீ.ஈ. பரீட்சை வினாத்தாள்கள் நேற்றிரவு யாழ். வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஏப், 21

வடக்கு - கிழக்கில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை திட்டமிட்டபடி ஜி. சீ. ஈ [உயர்தர] விசேட பரீட்சை ஆரம்பமாகும்.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் பெரும் சிரமத்தின் மத்தியில் நேற்றிரவு பரீட்சை வினாத்தாள்களை கொழும்பில் இருந்து யாழ் கொண்டுவந்து சேர்த்தார்.

பரீட்சை ஒழுங்குகளுக்கும் விதிமுறைகளுக்கும் அமைவாக இந்த விசேட பரீட்சையை தடை ஏதுமின்றி நடத்துவதற்கு சகல தரப்பினரும் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்று கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாளை மறுதினம் ஆரம்பமாகும் விசேட பரீட்சை மே 18 ஆம் திகதி முடிவடையும். [ஓ-5]

## பெரியகல்லாறு வாசிகள் 300 பேர் கைதாகினர்

கொழும்பு, ஏப். 21

மட்டக்களப்பு, பெரியகல்லாறு பகுதியைக் கடந்த வியாழனன்று சுற்றி வளைத்த இராணுவத்தினர் 300பேரைக் கைது செய்து விசாரணைக்காக பெரியநீலாவணை இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர்,

அங்கு 16 பேர் தற்போது தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் ஏனையோர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## நான்கு சிப்பாய்கள் பலி

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தவில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் நான்கு இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் நேற்று கொழும்பில் இத்தகவலை வெளியிட்டன. [உ]

## இத்தாலிக்குள் நுழைய முயன்ற 51 யாழ்ப்பாணத் தமிழர் கடும் குளிரில் சிக்கினர்!

### 3 குழந்தைகள் உயிரிழப்பு

யூகோஸ்லாவியாவிலிருந்து எல்லையைக் கடந்து இத்தாலிக்குள் கால்நடையாக நுழைய முயன்ற யாழ் தமிழர் குழு ஒன்று கடும் குளிரிலும் பனிப்புயலிலும் சிக்கியதால் அக்குழுவில் இருந்த மூன்று குழந்தைகள் உயிரிழந்தன. மற்றொரு குழந்தை ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளது.

கடந்த புதனன்று சட்டவிரோதமாக எல்லையைக் கடக்க முயன்ற 51 யாழ்ப்பாணத்தவரே இவ்வாறு குளிரில் சிக்கினர்.

குளிருக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் பஸ் ஒன்றுக்குள் இவர்கள் தஞ்சம் அடைந்திருந்தபோது பொலிஸார் இவர்களை மீட்டனர்.

முறையே 3, 5, 10 வயதுடைய பிள்ளைகளே உயிரிழந்தனர். மேலும் மூவர் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## தாண்டிக்குளம் பகுதியில் 3 பொதுமக்கள் பலி!

கொழும்பு, ஏப். 21

தாண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த மோதல் ஒன்றின் போது 3 பொது மக்கள் உயிரிழந்தனர் என்று 'ரூபவாஹினி' யின் செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது

உயிரிழந்தவர்களின் பெயர் விவரங்கள் ஏதும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்படவில்லை. [ஓ]

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு ஏப் 21

கிளிநொச்சியில் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு இன்று காலை 6 மணி முதல் நீக்கப்படுவதாக [illegible] வட்டாரங்கள் நேற்று அறிவித்தன. [உ]

## 7 பேர் பலி

பம்பாயில் நேற்று இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புச் சம்பவங்களினால் 7 பேர் கொல்லப்பட்டனர்

பஸ் நிலையம் ஒன்றில் வெடித்த குண்டினால் 6 பேர் கொல்லப்பட்டனர். [ஓ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதேபூரில் வி.பி. சிங்

புதுடில்லி, ஏப். 21

உத்தரப்பிரதேசம் பதேபூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடுவதற்கான தமது வேட்பு மனுவை முன்னாள் பிரதமர் வி. பி சிங் நேற்றுத் தாக்கல் செய்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் திரு. சிங் இதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

மலர்வு: 09 — 09 — 1936



உதிர்வு: 23 — 03 — 1991

அமரர் பேராசிரியர்

### சோமசுந்தரம் கந்தையா

[பீடாதிபதி விவசாயபீடம், கிளிநொச்சி]

கடந்த 23 - 3 - 91 இறைவனடி சேர்ந்த எங்களது தெய்வத்தின் மரணச் சடங்கில் நேரில் பங்கு கொண்டும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும், மலர் வளையங்களைச் சாத்தியும், துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு 22 - 04 - 1991 [திங்கட்கிழமை] அன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 7, குறோசற் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

[16463]

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் [மணியம்] காலமாகிவிட்டார்:

அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும், நகுலாம்பிகை, நகுலேஸ்வரி, செல்வராசா ஆகியோரின் தந்தையும் கணேஸ்வரன், தவமணிதேவி ஆகியோரின் மாமனாரும் பரமேஸ்வரநாதன் சாந்தினி [கொழும்பு], ரவீந்திரநாதன் வசந்தி [நோர்வே], சந்திரகுமாரன் ஜெயந்தி [பிரான்ஸ்], செல்வச்சந்திரன் [கனடா], சுமதி, நவரத்தினம் மீனாகுமாரி, இகைசிங்கம் புஸ்பலதா [ஜேர்மனி], செல்வக்குமாரன் [ஜேர்மனி], விக்னேஸ்வரன், மூர்த்தி மஞ்சுளா [ஜேர்மனி], நாகேஸ்வரன் [கனடா], விக்னேஸ்வரன், சதீஸ்வரன் ஆகியோரின் பேரனும் சிவஞ்சலி சாருஜன், நிலாஜினி, ரமணன், பிரியதர்சினி, ரஜீவன், சஞ்சீவன், மயூரன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியை இன்று 21 - 4 - 91 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 36,9/1 K K S வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக லோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செல்வராசா
[மகன்]

[16497]

### சதாசிவம்பிள்ளை மகாலிங்கம்

வேலணை மேற்கைச் சேர்ந்த முன்னை நாள் கிராம தலைமைக்காரனும், சமாதான நீதிவானும், திடீர் மரணவிசாரணை அதிகாரியுமான சைவத் தமிழ்ப் பேரறிஞர் ஸ்ரீமத் சதாசிவம்பிள்ளை மகாலிங்கம் அவர்கள் 20-4-91 சனிக்கிழமை காலமானார். அன்னார் திருமதி மங்களம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற வேதநாயகம்பிள்ளையின் தந்தையாரும், திருமதி பரமேஸ்வரி வேதநாயகம்பிள்ளையின் மாமனாரும், புஜங்க பூரணி, தாரணி ஆகியோரின் பேரனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-4 91 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் அம்பலவி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை தயவு செய்து யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
நா ப. சிவலோகநாதன்

வேலணை மேற்கு,
வேலணை.

[16507]

## யு. எஸ். குழு யாழ். வருகிறது

யாழ்ப்பாணம், ஏப். 21

யு. எஸ். எயிட்ஸ் அதிகாரிகள் குழு ஒன்று நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

யு. எஸ் எயிட்ஸ் அமைப்பால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளைப் பார்வையிடவே இந்தக் குழு இங்கு வருகிறது. [ஒ-3]

## மாத்தறையில் வடபகுதி தமிழர் கைது

கொழும்பு, ஏப் 21

மாத்தறை மாவட்டம், கொட்டுவேகொட என்னும் இடத்தில் வைத்து வடபகுதித் தமிழர் ஒருவரை மாத்தறைப் பொலீஸார் கைது செய்தனர்.

முஸ்லிம் ஒருவரைப் போல அந்த நபர் பாசாங்கு செய்தபோது பொலீஸார் அவரைக் கைது செய்தனர் என பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அந்தநபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக தென் மாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு சுமணசேகரா சொன்னார். [இ எ]

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

உள்ளூராட்சி ஊழியர்கள், சனசமூக நிலைய நிர்வாகிகள், சகல பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை 22 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும். [இ-த]

### சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் சங்கத் தலைமைப் பணிமனையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சுருட்டுத் தொழிலாளரின் நலனைப் பேணும் பல திட்டங்கள் முன் வைக்கப்பட்டன. [இ-த]

### சிற்றுண்டிச்சாலை

தென்மராட்சி, ஏப்ரல் 21

சிறிதுகாலம் மூடப்பட்டிருந்த சாவகச்சேரி ஆஸ்பத்திரி சிற்றுண்டிச்சாலை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. வைத்தியசாலை நலன் புரிச் சங்கம் தற்போது சிற்றுண்டிச்சாலையை நடத்தி வருகிறது. [இ - 117]

### கேரளத்தின் பெருமை

திருவனந்தபுரம், ஏப்ரல் 21

இந்தியாவிலேயே நூற்றுக்கு நூறு சதவீதம் கல்வி அறிவு பெற்றவர்கள் வாழும் மாநிலமாக கேரளம் நேற்று பிரகடனப்படுத்தப்பட்டது

கோழிக்கோடு நகரில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் புதிதாக கல்வி அறிவு பெற்ற ஒரு பெண் இப் பிரகடனத்தை வெளியிட்டார். [இ-எ]

### கூட்டுறவுச் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள், ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள், யாழ் கூட்டுறவுச் சபை ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று காலை 9-00 மணிக்கு நல்லூர் ப. நோ. கூ. ச. காரியாலயத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் மேதின [illegible] எடுக்கப்படவுள்ளன. [இ-த]

## அறந்தாங்கி தொகுதியில் திருநாவுக்கரசு போட்டி

### எஸ். டி. எஸ். தஞ்சாவூரில்

சென்னை, ஏப் 21

எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க — 2 ஐச் சேர்ந்த திருநாவுக்கரசு அறந்தாங்கியிலும் கே.கே.எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் சாத்தூரிலும் போட்டியிடுகின்றனர்.

தி மு. கழகத்துடன் அ.தி.மு. க — 2 கூட்டுச் சேர்ந்திருப்பது தெரிந்ததே.

இதேவேளை—

அ. மு. க. வின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான எஸ். டி. சோமசுந்தரம் தஞ்சாவூரில்—முன்னர் நிறுத்தப்பட்டவரின் இடத்துக்கு போட்டியிடுவார்.

துணைப் பொதுச் செயலாளர்களை ஆர். எம். வீரப்பன், எஸ் டி. சோமசுந்தரம் ஆகிய இருவரும் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள் என்று செல்வி ஜெயலலிதா முன்னர் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ]

### மீண்டும் உணவு

தென்மராட்சி, ஏப்ரல் 21

பளை வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு மீண்டும் உணவு விநியோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-117]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 1955 — 02 — 24



மறைவு: 1991 — 03 — 24

### அமரர் இராமு கிருஷ்ணபிள்ளை

24-03-1991இல் காலமான யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியை சேர்ந்த இராமு கிருஷ்ணபிள்ளையின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும் 22-04-1991 திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில் நிகழ உள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[16495]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 23 - 09 - 1934

மறைவு: 13 - 05 - 1989

திதி: 21 - 04 - 1991

அமரர்

### இரத்தினம் சபாரத்தினம்

[பாமா காட்வெயர், உரிமையாளர்]

எங்கள் அன்புத் தெய்வமே! பெற்றவள் பதை பதைக்க
பத்தினியாள் துடி துடிக்க ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி
மீளாத்துயில் கொள்ளச் சென்றதேனோ?
கழிந்துவிட்டது ஈராண்டு எனினும்
மறையவில்லை உங்கள் நினைவு நிஜமாய் மரணிக்காமல்
நித்தமும் நாம் மரணிக்கின்றோம்.
எம் துயரம் உங்கள் செவி ஏறாதா?
எம் கண்ணீரும் ஒரு நாள் கரை தான் காணாதா?
உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்!

அன்புத் தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமகன், பேரன்,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்,

"இரத்தின பவனம்"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[16496]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் வயோதிபர்களும் இராணுவத்தினரால் கைது

[மன்னார், ஏப்ரல் 21

தமது வீடுகளில் பாதுகாப்புக்காக தங்கி இருந்த வயோதிபர்கள் பலர் மன்னாரில் கைது செய்யப்பட்டு இராணுவத்தினரால் அழைத்துச்செல்லப்பட்டார்கள்.

நானாட்டான், உயிலங்குளம், ஆண்டான்குளம், அடம்பன் பகுதிகளில் அனேகமான பொதுமக்கள் பாதுகாப்பு கருதி வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துவிட வயோதிபர்கள் தமது வீடுகளிலேயே தங்கி இருந்தார்கள். இவர்களே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது. [இ-76]

## முஸ்லிம் கட்சிகளிடம் இறுதி யோசனை ஒப்படைப்பு

வடக்கு-கிழக்கு இணைந்த மாநில அமைப்பின்கீழ் இரு இன ரீதியான அமைடபுகளை ஏற்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகளின் இறுதி யோசனை முஸ்லிம் அரசியல் கட்சிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

49 பக்கங்கள் அடங்கிய இந்த யோசனையில் இனரீதியான அமைப்புக்களுக்கு வழங்கப்படவேண்டிய அதிகாரங்கள் கூறப்பட்டுள்ளன.

இந்த யோசனை அடங்கிய பத்திரத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் கையெழுத்திட்டுள்ளன.

முஸ்லிம் அரசியல் கட்சிகள் இந்த யோசனையை ஏற்கும் பட்சத்தில் தாம் இந்த யோசனைப் பத்திரத்தில் கைச்சாத்திடுவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்துள்ளது. [இ-எ]

## கருத்தரங்கு

பாவனையாளர் உரிமை கோரல் தொடர்பான கருத்தரங்கு ஒன்று அண்மையில் பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கக் காரியாலயத்தில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். [இ-த]

## அபிவிருத்திச்சங்கம்

சித்த மருத்துவக் கல்லூரியில் அண்மையில் "சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கம்" ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. [இ-த]


# நலமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி "ஷப்றா"

உங்கள் நிதி வளத்தைப் பெருக்க எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்.

நிலையான முதலீடுகள் கீழ்க்கண்ட வட்டி வீதங்களில் வரவேற்கப்படுகின்றன

6 மாதங்கள் 18%
1 வருடம் 20%
2 வருடங்கள் 23%
3 வருடங்கள் 24%

கடந்த நான்கு ஆண்டுகளுக்கான நிதி நிலை விவரம்

| | 1986/87 ரூபா 000 | 1987/88 ரூபா 000 | 1988/89 ரூபா 000 | 1989/90 ரூபா 000 |
|---|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11,320 | 14,355 | 23,207 | 23,636 |
| பொதுமக்கள் வைப்புகள் | 100,577 | 110,898 | 116.890 | 141,748 |
| வங்கிக் கடன்கள் | 7,718 | 6,540 | 11,364 | 17,981 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புக்களும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16,613 | 14.832 | 13,700 | 19,488 |
| வங்கி மீதிகள் | 10,912 | 3.189 | 1,894 | 2,952 |
| மொத்தச் சொத்துகள் | 127,176 | 143,823 | 162,240 | 193,265 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் இலாபம் | 19,288 | 23,174 | 23,701 | 23,434 |
| வைப்பாளருக்குச் செலுத்திய வட்டி | 16,881 | 20,025 | 20,833 | 22,351 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,307 | 3,148 | 2,868 | 1,083 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1,775 | 1,508 | 754 |

பணிப்பாளர் சபை

எஸ். பி. ஈ. கருணாரட்ண
சட்டத்தரணி, சமாதான நீதிவான். (தலைவர்)
எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
ஜே. டி. நவரட்ணம்,
A. I. B. (Lond.), பொதுமுகாமையாளர்

எ. எம். எச். பாரி.
B. A. (Hons.)
ஆர். பாலசுப்பிரமணியம்.

## ஷப்றா

யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,
2, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை, கொழும்பு - 04
207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 508087/90

[வி-5115]



# NEW SCIENCE ACADEMY

JAFFNA.

BOTANY
திரு. V.S. குணசீலன் B.Sc.

91 A/L

## DAY CLASS

PHYSIOLOGY — Thu. - 9-00 — 11-00
பிரிவு I ANATOMY (உடலமைப்பியல்) Mon., Fri. 11 00 — 1-00
ஆரம்பம்: 22 - 04 - 1991 Mon. 11-00 a.m.
பிரிவு II ANATOMY Mon., Fri. 9-00 — 11-00

## EVENING CLASS

91 A/L
ECOLOGY — (சூழலியல்)
Wed., Thu. 4-00 — 6-00, Thu. 6-15 7-30

92 A/L
பிரிவு I சூழியவியல் Wed., Thu., 2.30 — 4-00
பிரிவு II உருவவியல் Thu. 2-30 — 4 00

ஆரம்பம்: 23 - 04 - 1991

[வி-5117]



# மாதாந்த பயிற்சிப் பரீட்சை இலவச கருத்தரங்கு

GET SET TEST
நேர அட்டவணை

## A/L 91 - பரீட்சை 26 - 04 - 1991

| முற்பகல் பரீட்சை | பிற்பகல் கருத்தரங்கு |
|---|---|
| 8-00 — Chemistry - I | 1-00 — Chemistry |
| 9-00 — Physics - I | 2-00 — Physics |
| 10-00 — Zoology - I | 3-00 — Zoology |
| 10-00 — Pure Maths - I | 3-00 — Pure Maths |
| 11-00 — Botany - I | 4-00 — Botany |
| 11-00 — Applied Maths - I | 4-00 — App. Maths |

## ஆண்டு - 5 (புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை

பரீட்சை 28 04 - 1991

| பரீட்சை | கருத்தரங்கு |
|---|---|
| 1-00 — தமிழ் | 4-00 — தமிழ் |
| 2-15 — கணிதம் | 5-00 — கணிதம் |

## O/L Dec. 90 பரீட்சை 29 - 04 - 1991

| முற்பகல் பரீட்சை | பிற்பகல் கருத்தரங்கு |
|---|---|
| 7-00 — வர்த்தகம் - I | 1-45 — விஞ்ஞானம் |
| 8-00 — கணிதம் - I | 2 30 — கணிதம் |
| 9-00 — விஞ்ஞானம் - I | 3-15 — தமிழ் |
| 10-00 — தமிழ் - I | 4-00 — சமூகக்கல்வி |
| 11-00 — சமூகக்கல்வி - I | 4-45 — ஆங்கிலம் |
| 12-00 — ஆங்கிலம் - I | 5-30 — வர்த்தகம் |

## O/L Dec. 91 பரீட்சை 29 - 04 - 1991

| முற்பகல் பரீட்சை | பிற்பகல் கருத்தரங்கு |
|---|---|
| 7-00 — வர்த்தகம் - I | 1-45 — தமிழ் |
| 8-00 — கணிதம் - I | 2-30 — சமூகக்கல்வி |
| 9-00 — விஞ்ஞானம் - I | 3-15 — கணிதம் |
| 10-00 — தமிழ் - I | 4-00 — விஞ்ஞானம் |
| 11-00 — சமூகக்கல்வி - I | 4-45 — வர்த்தகம் |
| 12-00 — ஆங்கிலம் | 5-30 — ஆங்கிலம் |

★ ஆசனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன் கூட்டியே பதிவு செய்து சுட்டெண்களைப் பெற்றுக் கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு
Examination Unit,
BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[16480]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஜேர்சி இன கறவை மாடுகள் இரண்டு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: இ. கமலநாதன் ''நில்கந்தா'' மானிப்பாய். [மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகாமையில்.] [16472]

ஆரம்ப சுகாதாரவழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F. R. C. P., D. C. H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவபீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவிபோன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம், விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [இ-4822]

## தேவை

பழைய சோதனைப் பேப்பர், கொப்பி, புத்தகங்கள், சிமெந்துப் பைக்கெட்டுகள் தேவை. தொடர்புகொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில் [சி/4835]

[Rosin] றோசின், குங்கிலியம் சோஸ் பாணி, நாட்டுக் குங்கிலியம் தேவை. தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில். [சி/4836]

இரைண்டிங் பிளேட் வெட்டும் இயந்திரம் தேவை: விலை மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இல. 307. மே/பா உதயன் யாழ்ப்பாணம். [16494]

அனுபவம் வாய்ந்த உடைகள் [Cutting] வெட்டக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை: 24-4-91 அன்று புதன்கிழமை 9.00 மணிக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். 512, K. K. S Road, யாழ்ப்பாணம். [மனோகரா தியேட்டர் முன்பாக] [16493]

## கல்வி

G. C. E. [O/L] இல் கட்டாயபாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவே இல்லாது குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பலவிதமான இலேசான, நுணுக்கமான முறைகளில் குறைந்த காலத்தில் விசேஷ சித்திக்கு 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, சச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி. [16478]

## மணமகள் தேவை

26 வயது நிரம்பிய மில்லுடன், கடை வியாபாரம் செய்யும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. சீதனம் முக்கியமல்ல. நட்சத்திரம் பூசம். செவ்வாய்க் குற்றமுள்ளவர். ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [16486]

யாழ் இந்து 26 வயது நிரம்பிய B. Sc. சிவில் எஞ்ஜினியருக்கு 7இல் செவ்வாயுள்ள திருகோண நட்சத்திரம் கிரகபாவம் குறைந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்பு: ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [16488]

## மணப்பெண்கள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 28 வயதுடைய தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கும், 29 வயதுடைய 8இல் செவ்வாயுள்ள பட்டதாரிக்கும் கனடா, சுவிஸ், பிரான்ஸ், நாட்டு குடியுரிமை பெற்றவர்களுக்கும் மணப்பெண்கள் தேவை. கு: திருவிளங்கம், 16/16, வண்புரம், கொழும்புத்துறை. [16489]

## விநாயகர் அருள் மில்

வாடிக்கையாளர்களின் நலன் கருதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். விலாசம்: விநாயகர் அருள் மில், இல. 8, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். [16461]

## ஜோதிடம்

ராகு, கேது மாற்றமும் புத்தாண்டுப் பலன்களும் ரூபா 6/- எங்கும் விற்பனையாகின்றன. எண் ஜோதிடம், ரேகை சாஸ்திரம், சத்யசாயி பாபாவின் முற்பிறப்பு, மறுபிறவி வரலாறுகள், நான் யார்? ஆத்மஜோதி ஆனந்த ரகசியம், மைமமிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். எழுதியவர்: பேராசிரியர் சத்தியதாசன். 16490

## வணிக சிறுகுறிப்பு

வெளிவந்து விட்டது G. C. E. [A/L] வணிக சிறுகுறிப்பு [நடைமுறை விடயம்] எழுதியவர் தே. ஜெயராமன் விலை 15/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, C. C. A. யாழ்ப்பாணம். [சி-4831]

## ரைப்ரைட்டர்கள்

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்தவும், புதிய, பழைய ரைப்ரைட்டர்கள் வாங்கவும், விற்கவும் தமிழ், ஆங்கிலம் [Stencils] வேலைகள் செய்யவும் பியூட்டோ 89/17, மின்சார நிலைய வீதி, 8ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [இ-4827]

## வாசகர் கருத்தரங்கு

மீரா வெளியீடுகளாக வெளிவந்துள்ள நாவல்களில் நீங்கள் ரசித்துப் படித்த நாவல்களின் விமர்சனங்களை, கருத்துக்களை எழுதுங்கள்: புதியதாக வெளியிடப்படும் மீரா வெளியீடுகளில் பிரசுரிக்கப்படும். விரைவில் செம்பியன் திருச்செந்திநாதனின் ''முள்முடி மன்னர்கள்'' [16450]

## மலிவு விற்பனை

CLEARENCE SALE

20-4-91 முதல் 30-4-91 வரை A/L, O/L ஆண்டு 5 [புலமைப் பரிசில் பரீட்சை] வகுப்புகளுக்கான Tutes மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes 58A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [16484]

## தவறிவிட்டது

மருதடி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழாவின் போது திரு. எஸ். பவானந்தம் என்பவரது 613404023V இலக்க அடையாள அட்டை கறுப்பு நிற பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மருதடி விநாயகர் ஆலயத்தில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [16485]

வேலுப்பிள்ளை கனகமணி ஆகிய எனது அடையாள அட்டை [327222066 V] 22-3-91 அன்று மணியம் தோட்டத்திற்கும், துண்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயது செய்து இல. 3 பெந்திக்கோஸ் லேன், கண்டி றோட், அரியாலை யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். [16382]

# ஓட்டுநர் தேவை

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - யாழ் கிளை

மேற்கூறப்பட்ட சங்கத்தில் ஓட்டுநர்களுக்கு வெற்றிடங்கள் உண்டு. எனவே தகுதியுடையோர் தங்கள் விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு 26-04-91க்கு பிற்பகல் 3 மணிக்கு முன் சமர்ப்பிக்கவும். கடித உறையின் இடதுமூலையில் ''ஓட்டுநர் விண்ணப்பம்'' எனக் குறிப்பிடவும்.

[சி/5116]

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## இராஜதுரை உதயணன்

மண்ணில்: 17 - 06 - 1966

விண்ணில்: 21 - 04 - 1985

அடிமைத் தனத்தின் விலங்கினை உடைத்தெறிய
அசைக்க முடியாத உறுதியுடைய செல்வமே-உதயணன்
நீ மறைந்து முடிந்த ஆறாண்டை நினைக்கும் போது
எம் உள்ளம் எல்லாம் குமுறுதைய்யா, என் செய்வோம்!

எம் கண்ணீரை மாலையாக்கி, உன்பாத மலருக்கு
எம் காணிக்கையாக்குகிறோம் - உதயணா உனக்கு
உம் ஆத்ம சாந்திக்காய் நாம் அனைவரும் - என்றும்
எல்லாம் வல்ல இறைவனை இங்கு இறைஞ்சுகின்றோம்

அப்பா, அம்மா, தமபியர்,
தங்கையர், நண்பர்கள்.

திரு. பொ. இராஜதுரை,
ராஜன் சைக்கிள் வேக்ஸ்,
பருத்தித்துறை.

[4030]

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் நல்லதம்பி பஞ்சாட்சரம்

[மொசாயி லிமிற்றெட் கப்பல்துறை முகாமையாளர்]

தோற்றம்: 14-02-1929

மறைவு: 30 4-1990

திதி: 21-04-1991

எங்கள் காவல் தெய்வத்தை நினைவு கூருகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

[16491]

# பண்டிதர் சங்கர - வைத்தியலிங்கம் மனைவி இலட்சுமி காந்தம் இருவரினதும் நினைவஞ்சலி





| தோற்றம்: | மறைவு: | தோற்றம்: | மறைவு: |
|---|---|---|---|
| 14 — 01 — 1906 | 17 — 04 — 1986 | 19 — 12 — 1919 | 04 — 01 — 1989 |

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனுமது

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடத்தி இறைவனடி சேர்ந்த அன்பும், அறிவும், பண்பும் ஒருங்கே அமையப் பெற்ற எங்கள் அப்பாவின் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலியையும், எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலியையும் 21-04-1991இல் ஒன்றாக செலுத்தி அவர்களின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம். அன்றைய தினம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வீட்டில் நடக்கும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தெணி,
வல்வெட்டித்துறை.

[16475]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தமிழகத்தில் தொல்லை

தமிழகத்தில், அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் ஈழத்தமிழ் அகதிகள் பல தொல்லைகளுக்குள்ளாகி வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. தமிழகப் பொலீசார் இரவு நேரங்களில் அவர்கள் குடியிருக்கும் வீடுகளுக்குச் சென்று கண்டபடி கைது செய்து செல்கின்றனர்.

பொலீசாரின் இந்தத் தொந்தரவு, ஈழத் தமிழ் அகதிகளுக்கு மட்டுமன்றி, அவர்களுக்கு வீடுகளை வாடகைக்குக் கொடுத்த தமிழக மக்களுக்கும் தொந்தரவாகி விட்டது. அதனால் ஈழ அகதிகளைத் தமது வீடுகளை விட்டுச் செல்லுமாறு வீட்டுச் சொந்தக்காரர்கள் பலரும் வற்புறுத்தத் தொடங்கி விட்டனர்.

அகதி முகாம்களுக்கு வெளியே குடியிருப்போரும் சரி, அகதி முகாம்களில் தங்கியிருப்போரும் சரி, அவர்கள் தமிழகத்தில் அவர்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள் என்பதே உண்மை நிலை. அவர்கள் அடிப்படைத் தேவைகளைச் சரிவரப் பெற்று வசதியுடன் வாழ்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அகதிகளாகச் சென்றவர்கள் வசதியான வாழ்க்கையை எதிர்பார்க்க முடியாது.

உணவு, உடை, உறைவிடம் ஆகிய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் கஷ்டப்படுவது வேறு. கைது, விசாரணை, தடுப்புக் காவல் என்ற "இராணுவ" தொந்தரவுகள், கஷ்டங்கள் வேறு.

தமிழக மண்ணில், ஈழத் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளை ஒழிப்பது என்ற பேர்வையில், அகதிகள் துன்புறுத்தப்படுவது, அடாத்தானது. கொழும்பில் - தென்னிலங்கையில் - தங்கி இருக்கும் தமிழர்களை ஸ்ரீலங்காப் பொலீசாரும் படையினரும் எவ்வாறு கொடுமைப்படுத்துகிறார்களோ அவ்வாறே தமிழகத்திலும் ஈழத்தமிழர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள்.

நீங்கள் இங்கிருக்க வேண்டாம்; உங்கள் நாட்டுக்குப் போய்விடுங்கள் - என்று தமிழகப் பொலீஸார் - இந்திய அரசு - மறைமுகமாகச் சொல்கிறது. இரக்கப்பட்டு, மனிதாபிமானத்துடன் ஈழத் தமிழ் அகதிகளுக்கு குடியிருப்பு வசதி கொடுத்த தமிழக மக்களைக் கொண்டே அவர்களை வெளியேற்றும் மறைமுகச் சதியில் ஈடுபட்டிருக்கிறது என்று கூடச் சொல்லலாம்.

ஈழத் தமிழ் அகதிகள், தனக்குப் பெரும் பாரம் என்று இந்திய அரசு கருதக் கூடும். அது உண்மையானதாகவும், சரியானதாகவும் கூட இருக்கலாம். இந்திய அரசு அவ்வாறு உணர்ந்தால் அதனை வெளிப்படையாகக் கூறி, பகிரங்கமாக அறிவித்து ஈழத் தமிழ் அகதிகளை அவர்களின் சொந்த மண்ணுக்கு அனுப்பி விடுவதே நல்லது.

அதனை விடுத்து, ஈழஅகதிகளுக்குத் தான் தஞ்சம் கொடுத்து உதவி புரிவதாக உலகத்துக்குக் காட்டிக் கொண்டு, உள்ளூரச் சதி செய்வதும், குழி பறிப்பதும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

ஈழ அகதிகளைப் பயன்படுத்தித் தனது சொந்த நலன்களைப் பேண வேண்டும் என்று ஒருபுறத்தே திட்டமிட்டுக் கொண்டு, உள்ளார்த்தமாக அவர்களைக் கொடுமைப்படுத்துவது பெரும் போக்கிரித்தனம் ஆகும்.

# கிளிநொச்சி மாவட்டத்துக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம்

கிளிநொச்சி, ஏப்ரல் 21

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை ஆற்றி வந்த வசதிக் கட்டண ஆசிரியர்களுக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது கொத்தணி மூலாதாரப் பாடசாலைகளுக்கு, கல்வித் திணைக்களத்திலிருந்து சென்ற கல்வி அதிகாரிகள் குழு அவர்களின் ஆவணங்களைப் பரிசீலனை செய்துள்ளது.

இந்த ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டபோது கொத்தணி அதிபர், வசதிக் கட்டண ஆசிரியர் கற்பிக்கும் பாடசாலையின் அதிபர், அப்பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

ஆசிரியர் தின வரவு இடாப்பு கையொப்பமிடும் பதிவேடு, சம்பளத்திரட்டுப் புத்தகம், கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதங்கள் உட்பட பல்வேறு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. [இ-144]

## வரலாற்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 21

வரலாறு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகப் புவியியல் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கை யாழ். விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவும், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையும், யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்துகின்றன. [இ-த]

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

ஜீ. சீ. ஈ. [உயர்தரம்] பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும். [இ-3]

# அ.தி.மு.க கூட்டணியிலிருந்து முஸ்லிம் லீக் வெளியேறியது

சென்னை, ஏப். 21

இந்திரா காங்கிரஸ்—அ. தி. மு. க. கூட்டணியில் இருந்து அப்துல் சமது தலைமையிலான இந்திய முஸ்லிம் லீக் கட்சி வெளியேறிவிட்டது.

இத்தகவலை கட்சியின் தலைவர் ஏ.கே. அப்துல் சமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் தமது கட்சி தமிழகத்தில் 8 லோக சபைத் தொகுதிகளிலும் 44 சட்டசபைத் தொகுதிகளிலும் போட்டியிடும் என்று தெரிவித்த அவர், பாண்டிச்சேரி சட்டசபைக்கு ஏழு தொகுதிகளில் தமது கட்சி போட்டியிடும் என்றார்.

இதேவேளை —

சமது தலைமையிலான இந்திய முஸ்லிம் லீக் தி. மு. க. வுடனும் பாட்டாளி மக்கள் கட்சியுடனும் போட்டி தவிர்ப்பு உடன்பாடு ஒன்றை செய்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக இன்னொரு தகவல் தெரிவிக்கிறது.

அப்துல் லத்திப் தலைமையிலான இந்திய முஸ்லிம் லீக் ஏற்கனவே தி. மு. க வுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்டுள்ளது தெரிந்ததே. [உ-எ]

# தமிழர்களைக் காணாமற் போகச் செய்யும் ஸ்ரீலங்காவின் 'கறுப்புச் சட்டை' மனிதர்கள்!

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் தலைநகரம், அழகிய துறைமுகத்தைக் கொண்ட திருகோணமலை.

அங்குள்ள தமிழர்கள் காதோடு காதாகப் பேசுவது, [Whister] இரவில் கறுப்புச் சட்டை, காற்சட்டை அணிந்து வந்து "விசாரணைக்கு நீர் தேவைப்படுகிறீர்" என்று ஆட்களைக் கூட்டிச் செல்லும் பாதுகாப்புப் படையினர் பற்றியே தான்.

இப்படி காணமற்போன தமிழர்கள் திருகோணமலையில் எவ்வளவு பேர் என்பது ஒருவருக்குமே தெரியாத விஷயமாகும்.

இப்படித் தமிழ் மக்கள் காணமற்போவது இலங்கையின் எட்டு ஆண்டு காலசிவில் யுத்தத்தில் புதிய கட்டமாக உள்ளது......

திருகோணமலையின் தெற்கே மட்டக்களப்பில் இருந்து கடந்த ஒன்பது மாதங்களில் காரணமின்றி 8 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று மனித உரிமை அவதானிகள் கூறுகின்றனர். கைது செய்யப்பட்ட இவர்கள் பின்னர் காணப்படவே இல்லை.

திருகோணமலையில் காணாமற் போனவர்களை எண்ணிப் பார்ப்பது கஷ்டமான காரியம் திருமலை வரவர வெறுமையான நிசப்தமான நகராக மாறி வருகிறது.

## பீப்பாய்க் குண்டு

கடந்த ஆண்டு ஜூன் மாதம் விடுதலைப் புலிகள் அரசப்படைகள் யுத்தம் ஆரம்பமான பின்னர் கொழும்பு அரசு போராளிகளை வெளியேற்றுவதாகக் கூறி சிவிலியன் வாழும் பகுதிகளில் பீப்பாய்க்குண்டுகளைப் [Barrel Bombs] போடத் தொடங்கியது.

வெற்று எண்ணெய் பீப்பாய்களில் எரியும் திரவங்களை அடைத்து இந்தப் பீப்பாய்க் குண்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

இக்காலத்தில் போராளிகள் மறைந்து இருந்து நடத்தும் தாக்குதல்கள், படையினரின் பழிவாங்கும் நடவடிக்கைகளில் நாடுமுழுவதிலுமாக 4,000 பேருக்கு மேல் உயிரிழந்து விட்டனர்.

திருமலையில் [illegible] லட்சம் மக்களில் நான்கில் ஒரு பங்கினர் சண்டைக்கு அஞ்சியும். இராணுவத்தினரின் தேடுதல் வேட்டைக்குத் தப்பு முகமாகவும் சொந்த இடங்களை விட்டு வெளியேறி விட்டனர்.

திருகோணமலை மாவட்

---

கிழக்கு மாகாணம் தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறிக் கொண்டு, அரசாங்கம் அப்பகுதித் தமிழர்களுக்குச் செய்யும் அட்டூழியங்கள் அளவிட முடியாதவை,

ஆனால்

அவை பற்றிய தகவல்கள் சரியாக வெளிவருவதில்லை. இருட்டில் வைக்கப்பட்டுள்ளன.

அந்த இருட்டில் ஒளி ஏற்றுவது போல, உலகின் பிரபல வார சஞ்சிகையான "நியூஸ் வீக்" தனது 25 03-1991 இதழில் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

திருகோணமலைக்கு நேரில் சென்று பார்த்த அமெரிக்கப் பத்திரிகையாளர்களான டோனி எமர்சன், ஸ்டீவ் லீ வைன் ஆகிய இருவருமே இருளுக்குள் உண்மையைத் தேடியவர்கள் ஆவார்கள்.

அவர்கள் எழுதிய "ஸ்ரீலங்காவில் கறுப்புச் சட்டைகள் — காணாமற் போவோர் எண்ணிக்கை அதிகரிப்பு — என்ற கட்டுரையின் முக்கிய அம்சங்கள் 17 04-91 ஆம் திகதிய உதயனில் செய்தியாகத் தொடுத்து வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

வாசகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் விதத்தில் கட்டுரையை இன்று முழுமையாகப் பிரசுரிக்கிறோம்.

---

டத்தில் 30 அகதி முகாம்கள் உள்ளன. இவற்றை படையினர் அடிக்கடி சோதனையிடுகின்றனர்.

## அகதிமுகாம் தலைவர் கருத்து

தனது பெயரைக் கூற விரும்பாத நிலாவெளி வடக்கில் உள்ள ஓர் அகதிமுகாமின் தலைவர் பின்வருமாறு கூறுகிறார். "கடந்த ஆண்டு இராணுவத்தினர் [illegible] நடத்தி 84 ஆண்களைப் பிடித்தது.

"பாதுகாப்புப்படையினர் கைதுசெய்த 84 ஆண்களில் 45 பேருக்குத்தான் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. எஞ்சியோர் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காணமற் போயிருக்கலாம். எமக்கு அது பற்றித் தெரியாது"

காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட ஓர் அகதி கூறுகிறார். நான் "அடைக்கப்பட்டு இருந்த கிறையில் 350 பேர் வரை காவலில் வைக்கப் பட்டிருந்தனர்"

"என் கைகளை பின்னால் கட்டினர். என் கண்களும் மூடிக்கட்டப்பட்டன. இரண்டு வாரங்களாக சாப்பாடே சரியாகக் கிடைக்கவில்லை இறுதியில் விடுவிக்கப்பட்ட 15 பேரில் நானும் ஒவன். ஏனையோருக்கு என்ன நடந்தது என்பது தெரியாது"

## போர்முனையில் முன்னேற்றமில்லை

சிவிலியன்கள்மீது இராணுவம் நடத்தும் தாக்குதலைகளால் போர்முனையில் ஏதும் முன்னேற்றம் காணப்படவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலான இடங்கள் போராளிகளின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன. கிழக்கு மாகாண பெரிய நகரங்களில் இராணுவத்தினர் வீதிகளில் தடை ஏற்படுத்தி பகலில் சோதனை நடத்துகின்றனர். இரவு என்றதும் படையினர் பாசறைக்குத் திரும்பிவிடுகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் இரக்கமற்றவராகவும், மற்றப்படி யதார்த்தரீதியாக செயல்படுபவராகவும் கருதப்படுபவர் ஜனாதிபதி பிரேமதாஸா.

வடக்கு - கிழக்குச் சண்டையில் இராணுவத்தின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்த இராணுவத்தில் உள்ள கடும் போக்காளருக்கு எதிர்வரும் ஜூன்மாதம்வரை ஜனாதிபதி காலக்கெடு வழங்கியிருக்கிறார் என்று கொழும்பில் ராஜதந்திரிகள் கூறுகின்றனர். இது சரிவராவிட்டால் மீண்டும் அமைதிப்பேச்சுக்களை ஜனாதிபதி ஆரம்பிக்கலாம்.

பெயர் சொல்லாதுகூட காணாமற் போகின்றவர்கள் பற்றித் தெரிவிக்க திருகோணமலையிலுள்ள பெரும்பாலான தமிழர்கள் முன்வர மறுக்கிறார்கள். வெளிப்படையாக முன்னர் பேசிவந்த வழக்கறிஞர் ஒருவர் இப்போது, 'மனித உரிமைகளைப் பேணுவதற்காக வேலை செய்வதை நான் இப்போது நிறுத்திவிட்டேன். அப்படி நடப்பது இனியும் புத்திசாலித்தனமான காரியம் அல்ல'' என்றார்.

உள்ளூர் நிவாரண அதிகாரி ஒருவர் கூறுகிறார்:'' அகதி முகாம்களுக்கு மருந்து வகைகளை எடுத்துச் செல்வதற்கு சர்வதேச நிறுவனங்கள் வழங்கும் பாதுகாப்புடன் நாம் செல்கின்றோம்',,

இன்னொருவர் கூறுகின்றார்: மனித உரிமை விஷயங்களில் நாம் சம்பந்தப்படுவதேயில்லை. அதனால் நாம் உயிர்வாழ்கின்றோம்'.—

இராணுவத்தால் நியமிக்கப்பட்ட பிரஜைகள் குழு அகதிகளை பிரதிநிதித்துவம் செய்கிறது. காணாமற் போனவர்களைப்பற்றி அக்குழு விசாரித்து திருமலை இராணுவத் தளபதி பிரிகேடியர் சிறிபீரிஸிடம் தெரிவிக்கிறது.

காணாமற்போனவர்கள் பற்றி உத்தியோக ரீதியில் முறைப்பாடுகள் எதுவும் எமக்கு வரவில்லை. அப்படியிருந்தும் அதுபற்றிய தகவல்களை விசாரித்து வருகிறோம்.'-இப்படி பிரிகேடியர் சிறிபீரிஸ் கூறுகின்றார்.

நள்ளிரவில் கதவுகளைத் தட்டும் சத்தங்கள்பற்றி இலங்கையர் முறையிடுவது இது முதல்தடவையல்ல.

சிங்கள பௌத்தர்களின் ஆதிக்கத்தில் உள்ளது கொழும்பு அரசு......

சிங்களத் தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் போது 1989, 1990 ஆம் ஆண்டுகளில் 40 ஆயிரத்துக்கு அதிகமானோர் காணாமற் போய்விட்டனர் என்று கொழும்பில் மனித உரிமைக்குழு ஒன்று தெரிவித்தது.

இப்போது கைது செய்யப்படுவதும் ஆட்கள் காணாமற்போவதும் வடக்கு-கிழக்குப் பகுதிக்குத் திரும்பியுள்ளது என்று சிலர் கூறுகிறார்கள்.

ஆட்கள் காணமற்போவது பற்றிய அறிக்கைகளினால் இராணுவத்தினரின் நடத்தை மீது கவனம்திரும்பியுள்ளது. படையினரின் துன்புறுத்தல்களை நிறுத்த இதுமட்டும் போதாது. [இ - எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸாம் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நிறுத்தம்

அஸாம் மாநிலத்தில் அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு [உல்பா] எதிரான இராணுவ நடவடிக்கைகளை இந்திய இராணுவம் துணை இராணுவம் ஆகியன உடனடியாக இடைநிறுத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அஸாம் ஆளுநர் லோக்நாத் மிஸ்ரா இதனை நேற்று அறிவித்தார்.

அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்துவதாகவும் தேர்தல் பணியில் தலையிடுவதில்லை என்றும் கடந்த 10 ஆம் திகதி ''உல்பா'' அமைப்பு அறிவித்ததை அடுத்து அதற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது, [உ]

# பயணிகள் பெரும் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 21

கொழும்பு செல்வதற்காக நேற்று பெரும் எண்ணிக்கையான பயணிகள் முத்திரைச் சந்தியில் கூடி இருந்தனர்.

கடந்த பல நாட்களாக வவுனியா ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது. தற்பொழுது வவுனியா ஊடாக போக்குவரத்து ஓரளவு சீரடைந்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

முத்திரைச்சந்தியில் கூடியிருந்த பயணிகளை ஏற்றிக் கொண்டு அடுத்தடுத்த பல வாகனங்கள் நேற்று மாலை ரோரதிவு நோக்கிய புறப்பட்டன.

பயணிகள் வாகனங்களில் இடம்பிடிக்க முண்டியடித்ததை அவதானிக்க முடிந்தது. [ஓ-5]

# மேலதிக அரச அதிபர்களாக பலர் நியமனம் பெறுவர்

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ். மாவட்டத்தில் 14 மேலதிக அரச அதிபர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் தற்சமயம் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் இரட்டிப்பாக்கப்பட உள்ளன.

இந்தப் பிரிவுகளில் தற்சமயம் கடமையாற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் மேலதிக அரச அதிபர்களாகவும் அந்தப் பிரதேச செயலாளர்களாகவும் கடமையாற்றுவார்கள்.

புதிதாக உருவாக்கப்படும் பிரிவுகளுக்கு உதவி அரச அதிபராகவும், உதவிச் செயலாளர்களாகவும் புதியவர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். [ஓ 3]

# 65 இரத்தினக் கற்களை விழுங்கிய இளைஞர்!

## கட்டுநாயக்காவில் பிடிபட்டார்

65 இரத்தினக் கற்களையும், 6 தங்கப் பவுண்களையும் இரு இளைஞர்கள் விழுங்கி, அவற்றை கடத்த முயற்சித்தபோது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பிடிபட்டுக் கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை இரு முஸ்லிம் இளைஞர்களையும் சுங்க அதிகாரிகள் கைது செய்தனர்.

இலங்கையரான இவ்விரு இளைஞர்களும் இந்தியாவுக்கு செல்ல இருந்தனர். கைதானவர்களில் ஒருவர் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பவுண்களை விழுங்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மற்றைய இளைஞர் விழுங்கிய 65 இரத்தினக் கற்களின் பெறுமதி உடனடியாக நிர்ணயிக்கப்படவில்லை. [ஓ-5]

# இன்று

யாழ்ப்பாணம், ஏப் 21

நாளை மறுதினம் ஆரம்பமாக இருக்கும் ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை நிலையங்களின் இணைப்பாளர்கள், உதவி இணைப்பாளர்கள் ஆகியோருக்கான விசேட கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ். கல்வி அலுவலகத்தில் நடைபெறும். [ஓ-5]

# மரண அறிவித்தல்

## நாகம்மா கார்த்திகேசு

காலஞ்சென்ற மலேயன் பென்சனியர் கார்த்திகேசுவின் அருமை மனைவி திருமதி நாகம்மா கார்த்திகேசு 20 - 4 - 91 சனிக்கிழமை சங்கரத்தையில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் [மலேசியா], காலஞ்சென்ற சண்முகநாதன் [பிரதி அத்தியட்சகர், நீர்ப்பாசன இலாகா], பாக்கியம், பரமநாதன் [மலேசியா], அருமைநாதன் [மலேசியா], பஞ்சலிங்கம் [C. M. L T, மகரகம புற்றுநோய் வைத்தியசாலை], மகாலிங்கம் [புரூணை], நாகலிங்கம் [Eng. Cons. Ltd], நவரட்ணம் [U K.], செல்வஇலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், சேனாதிராஜா [ஓய்வுபெற்ற தொலைத் தொடர்பு உதவி நிர்வாகச் செயலாளர்], ஜெயரஞ்சிதன் கணக்காளர்—ஷொப்றா], இராஜேஸ்வரி [தெகிவளை], சுசீலா [மலேசியா], தவம் [மலேசியா], இந்திராணி [புரூணை], வள்ளிநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். சமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
நா. ஜெயரஞ்சிதன்,

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

[16506]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இல் உள்ள அச்சகத்தில் 21 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தொண்டர் நிறுவனங்கள்:

# தமிழ்ப் பகுதிகளில் இயங்குபவை குறித்து அறிக்கை கேட்கிறார் பிரேமா

யாழ்ப்பாணம், ஏப். 21

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து, ஜனாதிபதி அறிக்கை கோரியுள்ளார்.

வடக்கு – கிழக்கில் உள்ள சகல உதவி அரசாங்க அதிபர்களிடமிருந்தும் இந்த அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கும் இது சம்பந்தமான பணிப்புரைகள் கிடைத்துள்ளன.

வடக்கு – கிழக்கில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தமக்குக் கிடைத்த நிதிகளை தேசிய பாதுகாப்புக்குப் பாதகமாகப் பயன்படுத்தினவா என்பதை அறியவே அறிக்கை கோரப்பட்டதன் முக்கிய நோக்கமாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் முறைகேடுகள் குறித்து ஆராயும் ஆணைக்குழுவுக்கு உதவுமுகமாக இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக உதவி அரச அதிபர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு – கிழக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கு ஜனாதிபதியால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் கோரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:

★ வெளிநாடுகளில் இருந்து அரசசார்பற்ற நிறுவனங்களால் பெறப்பட்ட நிதி, தேசிய பாதுகாப்பு, பொருளாதார நடவடிக்கை, பொது மக்கள் அமைதி ஆகியவற்றுக்குப் பாதகமாகப் பாவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்—

இன, மத, கலாசார ரீதியாக ஐக்கியத்தையும், சமாதானத்தையும் கேடு விளைவிக்கும் விதத்தில் பாவிக்கப்பட்டுள்ளதா என்பதையும் விரிவாக அறிக்கைகருபத்தில் தரவேண்டும்.

★ கடந்த மூன்றாண்டு காலத்தில் இந்த நிறுவனங்களுக்கு உள்நாடு, வெளிநாடு, பிரதேச ரீதியாகக் கிடைத்த, செலவிடப்பட்ட நிதிகளின் விவரங்கள். [அ-3]

# அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 21

நாளை பிற்பகல் 2-30 மணிக்கு கன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கல்வி சம்பந்தமான கூட்டத்தில் பங்குபற்றும்படி மருதனார்மடம் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த சகல அதிபர்களையும் மருதனார்மடம் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# அரச...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பில் தங்கியுள்ளார். முல்லைத்தீவில் இருந்து கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் தமது இல்லம் வந்திருந்த திரு. பொன்னம்பலம், புதிய பதவி தொடர்பாக அமைச்சு உயர் அதிகாரிகளைச் சந்திப்பதற்காகவே கொழும்பு சென்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

திரு பொன்னம்பலம் இப்பதவியை ஏற்க மறுக்கும் பட்சத்தில் கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றப்படலாம் எனச் சொல்லப்படுகிறது [அ 8]

# லெப். கேணல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலிக்கு வைக்கப்பட்டபோது பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும், விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களும் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

அவரது புகழுடல் பின்னர் கைதடி, சாவகச்சேரி ஊடாக அவரது சொந்த இடமான கிளிநொச்சி – வட்டக்கச்சிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள மாவீரர் மயானத்தில் அவரது புகழுடல் தீயுடன் சங்கமமாக [illegible] பட்டது. [உ-8]

# பரீட்சை அட்டவணை

யழ்ப்பாணம், ஏப்ரல் 21

நாளை மறுதினம் ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ ஈ. உயர்தர விசேட பரீட்சை தொடர்பான பாடநேர அட்டவணையின் இறுதிப்பகுதி நேற்று வெளியானது.

ஏப்ரல் 23 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான பரீட்சை நேர அட்டவணை கடந்த 13 ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சை அட்டவணை வருமாறு:-

| | | |
|---|---|---|
| 02 - 5 - 91 | 8 - 30 — 11 - 30 | பொருளியல் II |
| | | மலாய் II |
| | | பேர்சிய மொழி II |
| | | ஹிந்தி II |
| | 12 - 30 — 3 - 30 | சிங்களம் I |
| 03 - 5 - 91 | 8 - 30 — 11 - 30 | கிரேக்கம் I |
| | | பிரெஞ்சு I |
| | 1 - 30 — 4 - 30 | நாடகமும் அரங்கியலும் I |
| 04 - 5 - 91 | 8 - 30 — 11-30 | நாடகமும் அரங்கியலும் II |
| | | கிரேக்கம் II |
| | | பிரெஞ்சு I |
| | 12 - 30 — 2-30 | நாடகமும் அரங்கியலும் III |
| 06 - 5 - 91 | 8 - 30 — 10 - 30 | பௌதிகவியல் I |
| | 8 - 30 — 11 - 30 | கணக்கியல் 1 |
| | | பாளி 1 |
| | 12 - 30 — 3 - 30 | விவசாய விஞ்ஞானம் 1 |
| | | ஜேர்மன் 1 |
| | | ருஷியன் 1 |
| | | உருது 1 |
| | | சீனமொழி 1 |
| 07 - 5 - 91 | 8 - 30 — 12 - 30 | பௌதிகவியல் 11 |
| | | கணக்கியல் 11 |
| | | பாளி 11 |
| | | ஜேர்மன் 11 |
| | | ருஷியன் 11 |
| | | உருது 11 |
| | | சீனமொழி 11 |
| | 12 - 30 — 3 - 30 | விவசாய விஞ்ஞானம் 11 |
| | | கிரேக்க உரோம- - நாகரீகம் 11 |
| 08 - 5 - 91 | 8 - 30 — 11 - 30 | சிங்களம் II |
| | 12 - 30 — 3 - 30 | இந்து சமயம் I |
| | | கிறிஸ்தவம் I |
| | | இஸ்லாம் I |
| | | சமஸ்கிருதம் I |
| 09 - 5 - 91 | 8 - 30 — 11 - 30 | சித்திரம் II |
| | | ஆங்கிலம் 1 |
| | 12 - 30 — 3 - 30 | இந்து சமயம் II |
| | | கிறிஸ்தவம் II |
| | | இஸ்லாம் II |
| | | சமஸ்கிருதம் II |
| 13 - 5 - 91 | 8 - 30 — 11 - 30 | சித்திரம் III |
| | | ஆங்கிலம் 11 |
| | 12 - 30 — 3 - 30 | வர்த்தகமும் நிதியும் 1 |
| 14 - 5 - 91 | 8 - 30 — 11 - 30 | புவியியல் 1 |
| | 12 - 30 — 3 - 30 | வர்த்தகமும் நிதியும் 11 |
| 15 - 5 - 91 | 8 - 30 — 11 - 30 | புவியியல் 11 |
| | 12 - 30 — 3 - 30 | இந்து நாகரிகம் 1 |
| | | இஸ்லாமிய நாகரிகம் 1 |
| 16 - 5 - 91 | 8 - 30 — 11 - 30 | புவியியல் 111 |
| | 12 - 30 — 3 - 30 | இந்து நாகரிகம் 11 |
| | | இஸ்லாமிய நாகரிகம் 11 |
| 17 - 5 - 91 | 8 - 30 — 11 - 30 | அரசியல் மூல தத்துவங்கள் 1 |
| | 1 - 30 — 4 - 30 | அளவை, விஞ்ஞான முறை 1 |
| 18 - 5 - 91 | 8 - 30 — 11 - 30 | அரசியல மூல தத்துவங்கள் 11 |
| | 12 - 30 — 3 - 30 | அளவை விஞ்ஞான முறை 11 |

[உ-5]

# யாழ் வாசிகள் நால்வர் கைது!

கொழும்பு, ஏப். 21

போலி விஸா மற்றும் பாஸ்போர்ட்டுகளைத் தயார் செய்து வந்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த—ஒரு பெண் உட்பட நான்கு பேரை—கொம்பனித் தெரு பகுதியில் வைத்து பொலீஸார் கைது செய்தனர்.

உதவிப் பொலிஸ் மா அதிபர் பி. உடுகம்பொல தலைமையில் சென்ற பொலீஸ் குழுவே இவர்களைக் கைது செய்தது.

கைதான நால்வரும் போலி தஸ்தாவேஜுக்களை உபயோகித்து பெரும் எண்ணிக்கையானோரை இத்தாலி, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வந்திருப்பதாகக் கூறப்பட்டது. [உ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org